2002 ஏப்ரல் 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போம் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

25-04-2002 அன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (25-04-2002) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-46 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

145. 1939ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 1-11-2001ஆம் நாளிட்ட 100-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1939ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1939) 16(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

146. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் 2000-2001ஆம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை மற்றும் கணக்குகள். (1959ஆம் ஆண்டு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 18/1959) 24(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

154. பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பத்து ஆறாவது அறிக்கை. (2001-2002)

155. பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பத்து ஏழாவது அறிக்கை. (2001-2002)